உ

கடவுள் துணை.

342
4'22

விஸ்வகுலம்

வெங்கடாசல பண்டிதர்

குமாரர் இயற்றிய

முருகர் ஒயிற்கும்மி.

இஃது

சென்னைப்புரசை

நாராயணசாமிப்பிள்ளை & பிரதர்

அவர்களது

நற்றமிழ்விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

...லை] 1922. [அணா-2.

...னப்பெருமாள்முதலிவீதி, புரசை, சென்னை.

O26:4↓7
N22
180287

உ

சிவமயம்.

முருகர் ஒயிற்கும்மி.

விநாயகர்துதி.

மந்திரசடாட்சர சண்முகவிலாச
மணந்தவள்ளிச்சரிதையெனும் வண்மைதன்னை
விந்தைதருமொயிற்கும்மி சங்கீதமாக
மேதினியோர்படித்தெழுதி மிகக்கொண்டாட
பைந்தமிழாலடியேன்யா னுரைத்தபுன்சொற்
பகருமொழிக்கருள்புரியும் பரமனீன்ற
சுந்தரஞ்சேர்திடமான கருத்தைக்கூட்டுந்
தும்பிமுகக்கணபதியே துணைசெய்வாயே.

கும்மி.

தென்பரக்குன்றினில் மேவுங்குருபர தேசிகன்மேற்கும்மிப் பாட்டுரைக்க, சிகரத்திரு மகரக்குழை சிகமெய்ப்புகர் வடிவைத் தருந் தில்லைவிநாயகன் காப்பாமே. (1)

வள்ளியெனும்பசுங் கிள்ளையைக்கந்தன் மருவுங்கதையைக் கும்மியாக, வாழ்வுற்றிட நாவிற்றுதி மேவித்தருள பாலித்திடும் வாலைமனோன்மணி தாட்டுணையே. (2)

சங்கரசம்பு சதாசிவனீன்றருள் சண்முகர்மேற்கும்மிப் பாட்டுரைக்க, தந்தக்கனி முந்தக்கிரி வந்தித்தருள் விந்தைக்குரு தந்தி முகவன் துணையாமே. (3)

மந்திரபூரணக் கந்தனைவள்ளி மணந்தசரிதை வகையறிந்து, வாசத்துடன் நேசப்பிர காசத்தமிழ் பேசப்புகழ் மண்டலமெங் கும் நிறைந்திடவே. (4)

தேகஞ்சிறந்த குயில்மொழியைக்கண்டு காகந்தொனிசெய்த வாறதுபோற், சிந்தைக்கனி விந்தைப்பிர பந்தத்தமிழந்தத்துடன் செப்புகிறேனொரு புல்லறிவேன். (5)

காரிகைநன்னூ லிலக்கணங்கற்றுக் கவிசொல்லும்நாவலர் தங்கண்முன்னே, கல்லாதவன் இல்லாதவன் வல்லாண்மையாய் சொல்லும்பிழை கற்றறிந்தோர்கள் பொறுப்பீரே. (6)

180287

வாணிதமிழ்சித் தாத்திரிவருட மகாதிங்களேழ்த் தேதியினி
ல், மறையோன்குரு விறையோன்தரு முறைதங்கிய நிறையன்
பதி மானகரில்நன் னகர்வாசன். (7)

விஸ்வகுலத்தி லுதித்தெழுந்தவேங்க டாசலமைந்த னுரைத்
தகவி, விழையுந்தமிழ் தழையுங்கன கிளியுஞ்சிவ கழையுந்தரும்
வேலன்கிருபைசெய் வார்நிசமே. (8)

ஒங்கியநாகம் படம்விரிக்கக்கண்டு நாங்கூழுங்கூடநின் றுடுத
ல்போல, உலகந்தனி லிலகுந்தமிழ் நிலைகண்டவ ரிலையங்கொரு
ஊமைகண்ட கனவதுபோல் (9)

வீசும்புகழ்தழைத் தோங்கிடவேவிஸ்வ வேதகுலத்தில கன்
றமிழ்க்கு, வேலன்குண சீலனுமை பாலனனு கூலன்செயல்வேணு
மென்நாளுந் துணைநமக்கே (10)

ஆழிப்பெருங்கடல்வெள்ளத்துக்கொப்பனை யாகசிறுவாய்க்
கால் பாய்ந்ததுபோல், யானுங்கவி யேனென்றொரு தேனுங்கனி
போலுஞ்சொல வாறுமுகப்பெரு மாள்துணையே (11)

மட்டடங்காதசெந் தாமரைப்பொய்கையில் கொட்டியொரு
புரம் பூத்ததுபோல், வாசன்புகழ் நேசன்திகழ் தேசந்தனி லேசம்
பிர மாகவேசங்கீதக் கும்மிசொல்ல. (12)

முத்துபவளமுங் கோர்வைசெய்தாற்போற் சித்தமகிழ்ந்து
நன்றாகவுமே, முன்னோர்தமிழ் சொன்னாரென வென்னாசையி லிந்
நாளிலே மொழியுங்கல்விக் கருள்புரிவீர். (13)

ஆதியந்தமுநற் காரணந்தன்னை யறிந்துநன்றாகத் தெரிந்து
ரைப்பார், ஆடிப்பணி சூடித்தமிழ் பாடிக்கன வேடிக்கையி லான
ந்தங்கொண்ட ததிசயமே (14)

வையப்புகழுங் கலைமுனிவன்சிவ மந்திரவேள்விமலைக்கருகே,
மவுனக்குகை யதனிற்சிவ தவமுற்றிய கவனத்தொடு மாத்திரைக்
கோலுந் துலங்கிடவே. (15)

கையிற்பிடித்த திருவோடுங்கறை கண்டமுங்காதினிற் குண்
டலமும், கானிற்றிரு மேனிக்கொரு காவிக்குடை சோபித்திட
காரணமாய்த்தவஞ் செய்தாரே. (16)

ஜானகிமுன்வந்த மானதுபோலத் தவமுனிவன்றனைச் சேர
வென்று, தாரக்களை வேகத்திடு தேகத்திலே மோகித்திட தார்வ
னந்தன்னி லொருமானும் (17)

பொன்னிறங்கொண்டு புளகிதமாய்மேனி பூரித்துப்பால்ய பி
ராயமதாய், பூவைக்குரல் கூவித்தவ வேள்விக்கிரி மேவிக்கன போ
கப்பிழைத்திட வந்ததுவே. (18)

வந்ததைக்கண்டு கலைக்கோட்டுமாமுனி சிந்தைகலங்கித் திய ங்கிவனம், மதனக்குளிர் விதனத்திலே மருகிச்செய லுருகித்திரு மானைமருவிக் கலந்தாரே. (19)

மங்காமலேரிஷி கெர்ப்பமிமைப்போதுந்தங்காதென்றேசொ ல்லும்வாறதுபோல், மதியைச்சிவ கதியைத்தரு மதலைக்கனி யது வைத்திடல் வள்ளிகுழிதனி லீன்றதுவே (20)

மானீன்றபெண்ணாந்த கானகந்தன்னிலே வண்ணமணிக்குர ல் ஓசையிட்டு, வாலைக்குயில் மானுக்குல நீலப்பயி லுஞ்சோபிதம மதலைவாய்விட் டழுததுவே (21)

தேனூங்கனியுங் கிழங்கெடுக்கவென்று தேடியேவேடர்வரும் வழியிற், செடியிற்குர லடிவைத்தர வடிவைத்திட நடுவிற்சிறு செ ல்வியைக்கையி லெடுத்தனரே. (22)

கையிலெடுத்துநன் றாகவுமேயந்தக் கானவர்சேரியிற்கொண் டுசென்றார், கனியற்புத மினியைப்புகழ் மனிதற்புத வனிதைக்கு ற காரணமாக வளர்த்தாரே. (23)

ஆணிப்பவளக் கயிர்முறுக்கியதி லந்தமுள்ளசிறு தொட்டில் கட்டி, ஆசைக்குர லோசைத்தமிழ் பாஷைப்பல பேசித்தின மன் புடனின்றுதா லாட்டினரே. (24)

ஆரீரோபெண்ணே யாரீரோகண்ணே யாராரோ நீயாரோ, நளினத்துறு பழனக்கழை யிளவற்புத வளமைத்தமிழ் நாயகமே பெண்ணே கண்வளராய். (25)

அன்னமேதேனேயென் கண்ணே மின்னேயென்று ஆவலுட ன்கையில் தானெடுத்து, அணிபொற்கணை மணிவச்சிர புனிதத் தொடு வனிதைக்கணி யாடைவெகுபூஷ ணாதியிட்டார். (26)

கொஞ்சிமதலையை முத்தமிட்டுமிகக் கோலப்பணிகள் மிகப் பூட்டி, கொத்துச்சா முதலுப்பணி வைத்துப்பதி சிதறுப்பெயர் கொண்டுகுறவர் மகிழ்ந்தாரே (27)

ஒன்றிரண்டாகி மூன்றாகிவய தோரைந்துதிங்களுந் தாணாகி, ஓடித்தெரு வீதிக்குளே வேடச்சிகள் கூடித்தின வோவியமாக வ ளர்த்தாரே. (28)

மாதுவளரும் வளர்ச்சிகண்டேநம்பி மன்னனுமேமங்கை மா தரசும், மங்கைச்சிமிழ் கொங்கைக்குயில் தங்கப்பணி அங்கத்தி ட வள்ளியம்மனென்று பேருமிட்டார். (29)

காதுகுத்திபஞ்ச தக்கையிட்டுச்சின்ன காலுக்குக்காலாழி லியிட்டு, கதியிக்கிணை மதியைப்புனை கமலத்திரு வதனத்திலே ன்னத்தைக்கொஞ்சியே முத்தமிட்டார். (30)

பாடகந்தண்டை சிலம்பணிந்தார் பதக்கஞ்சுட்டி நுதற்கணி
ந்தார், பட்சத்தொடு மெச்சிப்புகழ் வச்சிரப்பணி பிச்சைப்பட
பாவித்துநன்றாய் வளர்த்தனரே (31)

மங்கையுமிப்படி வேடுவர்சேரியில் வாலிபங்கொண்டு வளர்ந்
திடுநாள், வரிசைத்துரை மகளுக்கொரு மழையற்புத வரையிற்
கன மாரியெந்நாளும் பொழிந்ததுவே. (32)

வெள்ளிமலைதிட வோரத்திலே தினை விதைக்கநல்ல நிலம்பா
ர்த்து, வெட்டுப்பயி ரிட்டுத்தளிர் மிட்டுக்கதி ரெட்டும்படி வேடுவ
ருப்புனற் காடுசெய்தார். (33)

காடுவிதைத்துப் பயிராகித்தினைக் கதிரும்வாங்கி மணிபிடித்
துக், காவிக்கினி கூவித்தினை மேவிக்கதி சேவித்திட கண்டந்தவே
டர் கவலைகொண்டார். (34)

தந்தையுடன்மைந்தர் வந்துநின்றுநப்பி தங்கையெனும் வள்
ளிநாயகியை, தனதாகியே சுனைமீறியே தினைதூவியே புனமீதிலே
தங்கையுடன்காவல வைப்போமென்று. (35)

என்றண்ணமார்கள்சொற் றட்டாமலேயந்த வேந்திழைவள்
ளி சந்தோஷமதாய், இன்பக்கட றென்புற்றொரு சம்பிரத்துட
னம்பிக்கையோ டேந்திழையுமுயிர் பாங்கியுமாய். (36)

நீருந்தினைவனந் தன்னிலுயர்பர ணேறினின்பலகைக் கவண்
வாங்கி, நீலக்கிளி யோலப்பட சோலைத்துயின் மேலுக்கிட னின்று
விழைகொண் டெறிந்தாளே. (37)

பூரணவேள்வி மலைச்சார்பில்வள்ளி பொங்குதினைப்புனகார்
க்கையிலே, புவனத்திலே தவமுற்றிய கவனச்குறு முனியற்புத
பொதிகைமாமலை விட்டிறங்கி. (38)

கந்தனிருக்குந் தலந்தோறுஞ்சென்று கபடநாரதன்சேர்வை
செய்து, காவிததிரு வேள்விக்கிரி சோபித்திட மேவிச்சிவ காரண
மாமுனி வந்தாரன்றே. (39)

ஆலோலமாலோல மென்றுசொல்லிவள்ளி ஆனந்தமாகக்கவ
ணெறிந்தாள், அசையத்தன மசையக்குட மிசையக்கன விசையி
ற்றொரு வாசைக்குரன்மணி யோசைசெய்தாள். (40)

ஏகலாபர நாரதனுனிது வேதோவதிசயந் தானெனவே,
இந்தக்குரல் சந்தப்பட வாதத்தொடு விந்தைத்தொனி யிதுவும்
பெண்குரல தானென்று. (41)

யோகத்திலேகண்ணை மூடிநின்றார்சிவ யோகியெனுந்தவ மா
முனிவன், யோசித்ததை நேசித்துளங் கூசிப்பிர காசத்துட னொ
ண்டொடிவள்ளியைக் கண்டாரே. (42)

பூரணவாலைமனோன்மணியோவிவள் பூலோகாம்பையோபொன்மகளோ, புவனத்திலே இவளுக்கிணை எவளோச்சரி தருமொப்பிட பூமண்டலத்தினுங் கண்டறியோம். (43)

என்றுமுனிவன் பரணெதிரேநின்று ஏந்திழைவள்ளி தனைப்பார்த்து, வேதப்பிர வாகக்கட லாசைப்பரி தாபத்தொடு வேறுவயண மெடுத்துரைப்பார். (44)

பேரென்னவூரென்ன ஆரம்மாநீசொல்லு பேதையரே பசுங்கோதையரே, பிரமித்துள மகிழக்குற மரபிற்கன வரமுற்றுனை பெற்றிடுந்தாய்தந்தை பேர்சொல்வாய். (45)

சொல்லுவன்கேளையா மாமுனியேநாங்கள் சொற்றவருந குறச்சாதி, சொர்தக்கிளை பந்தத்துவ மிந்தக்கிரி விந்தைப்புகழ்சூழுஞ்சிற்றூரல் குடியிருப்போம். (46)

தந்தைநம்பிராச னெங்களையாவெந்தன் தாய்பெருநன்கையென்றே சொலலுவார், தவமுற்றிய சிவசுந்தர மவுனத்தொடு புலனந்தனில் சாமிதிருநாமஞ் சாற்றுமென்றாள். (47)

நானிலமெங்கும் புகழ்படைத்தவள்ளி நாயகியே சொல்லக்கேளுமம்மா, நாதம்பெற கீதம்பெற வேதங்களையோதும்புகழ நாரதனென்று பெயருரைப்பார். (48)

கேளுந்தினைவனம் வாழ்மயிலேயுனக் கேத்தமணவாளன் பார்த்துவந்தேன், கிருபைக்கடல் தருசுப்பிர மணியத்துறை யுனை மெச்சியே கிஞ்சுகமபோலடி கொஞ்சிடவே, (49)

வேதமுனிசிவ ஞானத்திலேயும்மை மெத்தபெரியோ ரென்றேபொறுத்தேன், விகடத்தொழில் சகடத்திலே புகழக்கெடின் மகுடச்சடை வீணுகக்கொண்டு முடித்தாயே. (50)

கந்தனைமேவிக் கலந்ததனுலுன் கனக்குறைபாமோ குறக்கொடியே, கள்ளத்தொழி லுள்ளததிலே எள்ளத்தனை விள்ளததகா கபடமென்று நினையாதே. (51)

வேதஞ்சிறந்த தவமுனியேயுந்தன் வித்தைகளென்னிடஞ் செல்லாது, மெட்டுப்பயி லொட்டுக்குளிர் விட்டுக்கதை கட்டுக்கடை மேனமைசகுறக்குல நாமல்லவோ. (52)

தேசங்கடோறுங் குறம்பாடிக்கொண்டு திரியுமுங்கள் குறச்சாதி, சின்னத்தொழி லெண்ணததிலே யுனனிகருமு பினணப்பட சிறுங்குலேந்ததறியேனே. (53)

தாறுமாறும்மொழி பேசாதேயுன்னைத் தவமுனியென்றுஞ் சொல்வாரோ, சாதிகளம் பேதித்திட வாதித்தனை யேதிப்படி சற்றுமதியாமற் பேசுகிறாய். (54)

துள்ளுமெருது பொதிசுமந்தகதை தொல்லுலகோர் சொல்
லக்கேட்டிலையோ, சோரத்தன பாரத்திலே சேரத்திலே தாயுற்ற
வர் சுப்ரமண்யக்கந்த நாதனல்லோ. (55)

ஆர்சொன்னாரிம்மதி நாரதனேயிந்த வழகில்லாச் சொல்லை
யெடுத்துரைத்தாய், அடமுற்றொரு நடனத்தொழில் திடமுற்று
வர் தடமிட்டிடு மப்புறம்போயிங்கே நில்லாதே (56)

வாலசரவண வேலனுனக்கேத்த மாப்பிள்ளை தான்வள்ளி நா
யகியே, வனமிருந்தொளி ரிங்கிதத்திரு மங்கிலியத்துட னுன்கழு
த்திலே மாலையிடநல்ல வேளையிதே. (57)

மெய்யன்புகொண்டசன் யாசியென்றேயிந்த வேளைமட்டுஞ்
சும்மா நான்பொறுத்தேன், மிஞ்சுந்தொழில்வஞ்சந்தர நெஞ்சந்த
னி லஞ்சும்படி வேடர்கள்தேடி வருவாரே (58)

வள்ளியெனுஞ்சிறு பெண்ணேயுனக்கந்த மாப்பிள்ளைவேல
னே தான்சரியாய், மானுஞ்சுக வேனும்விழி மேனுந்தனத் தானுந்
தர தாதகனக்காலம் வரவில்லையோ. (59)

ஆரணியந்தனி லொருநொடியிலெந்த னண்ணமாரேழ்வருந்
தான்வருவார், அய்யாவெகு திடமாயுயிர் படவேதனை தொடுவா
ருயிர் அப்புறம்விசனப் படவேண்டாம். (60)

நல்லசுபதின வேளையிலேயுனை நாதன்சிவகிரி வேலனுமே, நா
ளைக்கலி யாணஞ்செய மேளத்தொடு தாளத்தொனி நாரதன்வே
டிக்கை பார்ப்பேனென்றார் (61)

வீண்சம்பிரதாயம் படியாதேயிங்கே வேறேதொழிலில்லை
யோமுனியே, வேசைப்படல் பொய்பேசச்சன் யாசிக்கிது நேசிக்
குமோ விண்ணாட்டுநாரத மாமுனியே. (62)

எந்தவிதஞ்சொல்லி வள்ளிக்குச்சம்மத மில்லையென்றேமுனி
தான்திகைத்து, எங்கும்பிர சங்கந்தர வெங்கண்ணழல் பொங்கு
ம்படி ஏங்கினனார்மூச்சை தாங்கினின்றார் (63)

செல்வக்குறவளளியின் திருவடிவைக்கொண்டு சித்திரமடலி
லெழுதவென்றே, சிந்தித்தவன் கந்தர்க்கிணை பந்தத்தொடு சொந்
தப்பட சேரும்படியாய் முடிக்கவென்று. (64)

பாதாதிகேச முதற்பரியந்தம் பரிந்தோடிவள்ளித் திருவழ
கைப், படியைதிரு முடியைச்சுக மடலிறகரு வொவியையதரு
பார்த்துநன்றாக வரைந்தாரே. (65)

கார்நிறங்கொண்ட குழலெழுதியதிற் கமலமல்லிகைப் பூவெ
ழுதி, கருணைப்பெறு நுதலிறபுகழ் கமலத்திருவழகைச்சரி கண்டு
மனமுவ் கலந்தெழுதி. (66)

வேல்விழிக்கஞ்சன மையெழுதியதின் மேலேதனுசு நுதலெழுதி, வீசும்புகழ் நேசந்திகழ் வாசன்பிரகாசந்தர மேலேயதிலொரு பொட்டெழுதி. (67)

வள்ளைத்தண்டைபோலே காதெழுதியதில் வச்சிரதொங்கல் முருகெழுதி, மாரன்குயில் கூறுந்தொனி மீறும்படி சேருஞ்சுக மன்மதபார்வையுங் கண்டெழுதி. (68)

செண்பகம்போல்நாசி கண்டெழுதியதிற் சிங்காரமூக்குத்தி தானெழுதி, செப்புங்கனிக் கொப்பென்னவே தக்கோர்சொலும் மிக்கோருரை சிவந்தவதரமுங் கண்டெழுதி. (69)

மோகனமுத்துபோல் பல்லெழுதியதில் முல்லையரும்பு நகையெழுதி, முனிவோர்களு மினிதாயொரு மனதாகிய கனிபோலவு மோகித்தருந்தும் படியெழுதி. (70)

காமன்கணை தீட்டுஞ் சாணையைப்போலக் கபோலமிரண்டையுங் கண்டெழுதி, கதியஞ்சுக மதியுந்தர முதிருஞ்சுவை மதுரம்பெற கன்னிக்கமுகினை கழுத்தெழுதி. (71)

கச்சணிகும்பத் தனமெழுதியதிற் காதல்ரசத்தைக் கலந்தெழுதி, கண்டஞ்சியே நினறும்புகழ் கொண்டுஞ்சுக மண்டும்படி கழையைப்போலிரு தோளெழுதி (72)

தங்கப்பணிகள் மிகவெழுதியதிற் சங்குமணியைக் கலந்தெழுதி, தாகதொடு மோகக்களை தேகத்திலே மோகித்திட சம்பிரமரேகையுங் கண்டெழுதி. (73)

மால்கண்வளருந் தளிரதுபோல்நல்ல வயிறுமுந்திச் சுழியெழுதி, மாரன்கணை மீறுங்கன தேறுந்திரு நாதந்தர மதனசன்னங்க டாமெழுதி. (74)

கஞ்சமலர்க்கர மிரண்டெழுதியதிற் காந்தளம்பூவைக் கலந்தெழுதி, கானைக்குற மானைத்திரு மேனிக்கழ காவைத்தொரு கற்பனையாயிடை கண்டெழுதி (75)

ஆசைவிளையுங் களஞ்சியத்தைப்பரமானந்தமாகிய தேன்கூட்டை, ஆருங்களி கூருஞ்செயல் தேறுஞ்சுக மீறும்படி யந்தரங்கத்தையுங் கண்டெழுதி (76)

வர்ணச்சரிகைத் துயிலெழுதியதின் மாதளம்பூவைச் சிறந்தெழுதி, மடமாதர்கள் திடமீறியே துடைதானொரு படமீதிலே வாழைநிகர்த்திடத் தானெழுதி (77)

நண்டைப்போலமுழங் தாளெழுதியதில் நல்லவிராற்கெண்டைசேர்த்தெழுதி, நளினத்திரு வடிவைச்சொலு மொழியைத் திகழொளிவைத்தொரு நான்முகன்புத்தகம் போலெழுதி. (78)

வள்ளியழகைச் சுகமடலிற்கண்டு மகிழ்ந்துநாரத மாமுனிவன், வாசனுக்கும ரேசனுக்கிவ ணேசமுற்றது வேமகத்துவமந்திரக்கந்தனுக் கோதவென்றே. (79)

வெள்ளிமலைப்புனம் விட்டகன்றேபந்த வேதமறைமுனி நாரதனும், விந்தைக்கிரி மைந்தர்க்கொரு கந்தர்க்கிவ ளந்தக்குயில் வேடிக்கையாய்வழி கூடிச்சென்றார். (80)

சித்திரமடலைக் கையிலேந்திக்கொண்டு சென்றமுனிவன் விரைந்தேகி, சேவற்கொடி கூவத்தினுஞ் சோபித்திட வாழ்வுற்றிடுஞ் சிவகுமாரனை வந்துகண்டார். (81)

கண்டவுடன்முனி தெண்டனிட்டந்த கந்தனையும்வல மாகவந்து, காதுக்குளே யோதிச்செயல் போதித்தொரு மாதுற்றிடுங் காரணந்தான்சொல்லக் கேளுமென்றார். (82)

ஐயனேயென்குரு வேசாமியிந்த அண்டருலகெலாம் பார்த்துவந்தேன், அதிமோகன ரதியோயிவ்ள் சதிபூரண மதிதானென ஆச்சரியஞ்சொல்லக் கேளுமென்றார் (83)

தென்பொதிகாசலம் விட்டிறங்கியிந்த தேசங்கள்சுற்றி வரும்வழியில், ஜெகமோகினி யிவளோவென சுகமேவிய மகள்சீருடை தெய்வமடந்தையைக் கண்டுவந்தேன். (84)

மின்னற்பிரகாச விளக்கொளியோயிவள் மெல்லியர்க்கெல்லாங் குலக்கொடியோ, வேதனிப்படி மாதெர்ருத்தியை சூதெனக்கப டாய்விதித்தது வேடர்தினைப்புனங் காக்கவென்றே. (85)

வாயினுற்சொல்லவுங் கூடாதுகண்டால் மற்றொருபெண்களைத்தேடாது, மங்கைக்கிவ ளங்கப்பணி தங்கச்சிலை யுங்கற்பனைமானைமடலி லெழுதிவந்தேன். (86)

பன்னிருகண்ணிலுங் கந்தசுவாமிநீ பாருமென்றேமடற் கைக்கொடுத்து, பாதபொற்கம லாசனத்திலே நீதமுற்றொரு சூதகற்றியே பணிந்துநாரதர் தெண்டனிட்டார். (87)

கந்தன்சுகமடற் கைதனில்வாங்கியே கண்சிமிட்டாமனின்றேதிகைத்து, கவலைக்கடல் பெருகத்திரி புவனத்திலு மிவளுக்கிணை கண்டதில்லையென்று காதல்கொண்டார். (88)

கண்ணேபொன்னேபெண்ணே வள்ளிவள்ளியென்று கையில்மடலைப் பிடித்துக்கொண்டு, காமன்கணை யைந்தும்பட சோபம்மிக வேவந்திட கந்தன்மயங்கித் தளர்ந்தாரே. (39)

கிட்டவந்தென்னிடம் பேசாயோபெண்ணே கிருபையாய் என்முகம்பாராயோ, கமலத்திரு வதனத்திலே முகம்வைத்தொரு சுகம்பெற்றிட கன்னியேநீதந்தா லாகாதோ. (90)

பெண்கொடியேபசுந் தங்கமேநீசற்றே பேசினால்வாய்முத்தஞ் சிந்திடுமோ, பேதகத்தொடு பாதகத்திநீ தோதகத்தொழிலேயிருந்தவள் பேசாமடந்தையோ சொல்லுமென்றார். (91)

கண்ணிமைகொட்டாத தென்றவமோபெண்ணே காமக்களஞ்சியமோவறியேன், கற்பகத்திரு வெற்படுத்துனை வைப்பதற்கொரு வெற்படுத்தவர் கன்னஞ்சவேடர் கண்டார்மயிலே. (92)

வாலசன்னாசியோ பேசவெண்ணாதோசொல் மவுனமோசுகமாதரசே, வாசகத்தொரு நேசகத்திலே யாசையென்குரலோசையேபட வாய்விட்டடங்காத மையல்கொண்டார். (93)

சித்தமிரங்கி யுருகாதோவுன்னைத் தேடியென்மோகம் பெருகாதோ, தேகத்திலே மோகித்தெனையோகப்பிர தாபப்படச் செங்கைதொண்டு புரியேனோ. (94)

வாய்திறந்தோர்மொழி சொல்லாயோவந்த மன்மதராஜனை வெல்லாயோ, மருடக்கன பாதத்திலே சுகமுற்றனு போகத்திலே மாறாமல்தொண்டு புரியேனோ. (95)

கட்டிக்கலந்து சுகந்திரவுன்னைக் கட்டிப்பிடித்தேன் சுகமடலே, காமக்கணை மீறிச்சுக போகத்தொடு பூமிக்குளே கந்தர்மடலையும் விட்டெறிந்தார். (96)

வாலசுப்ரமண்ய வேலருமிப்படி மயங்கிமெத்தையிலேசாய்ந்தார், மானோர்சுக மீனார்விழி தேனாளிது காணாமலே மாதுதெய்வானையுமோடிவந்தாள். (97)

அருகில்நின்றிடும் நாரதரைக்கண்டு அன்னைதெய்வானையும் என்னசொல்வாள், ஆதியிற்கப டாய்விதித்திட சாதியிற்றொழிலோவுமகிது அருந்தவமுனி வோர்க்கழகோ. (98)

அன்னைதெய்வானையே சொல்லுவன்கேளம்மா அடியேன்மேலொரு தோஷமில்லை, ஆரும்படைவீடும்விளை யாடுங்குகை நீருஞ்சுனை யாடியேசுற்றி வரும்வழியில். (99)

வேள்விமலையென்னுங் கானகத்திலங்கே வேடர்குறக்குல வள்ளிதன்னை, விரிவாகிய பரிபூரண மதுபோலவே சதிராயொரு பின்னைக்கண்டேனென்று சொன்னதல்லால். (100)

மங்களமாய்குற மானைமணார்க்குநீர் மாலையிடுமென்று பேதகமாய், வடிவேல்விழி மடமாதையு மடியாளுமக் கடியாளென வாயினாற்சொல்லவு மில்லையம்மா. (101)

உண்டவீட்டுக்குநீ ரண்டகஞ்செய்தாயே ஓகெடுவாய்பாவி நாரதனே, யுள்ளாகநீ யில்லாமலே கள்ளாமொழி விள்ளாதேநீ யுன்னிடசேதி தெரியுமென்றாள். (102)

இந்திரன்கண்ணே பசுங்கிளியேசும்மா யென்மேற்சந்தேக
மெண்ணாதே, யினிதாகிய கனியாவருந் தனதாகவே மனதாகுவ
தெப்படி கண்டாய் பெண்மயிலே. (103)

இத்தனையுஞ்செய்த கத்திரிகட்டவ னில்லையென்றேமொழி
சொல்லவந்தாய், இதைநீயொரு கதைபோலவு மதியோதலை விதி
யோசொலு மென்றைக்குஞ்சந்தேகந் தீராதே. (104)

குண்டுணிநாரத னென்றுனையிந்தக் குவலயந்தன்னி லெடுத்
துரைப்பார், குறையாகிய நெறிபேசியே பரியாசமா யெனையேச
வார் கொண்டசின்னத்தனங் கூறுகண்டாய். (105)

தொட்டிலையாட்டித் தொடையைநெருடிய தோதகவித்தை
யையானறிவேன், சுபசோபன மதுபேசிட முகமாயமோ யிதுயா
யமோ சுந்தரவள்ளியைப் போலெழுதி (106)

சித்திரமடலையென் சுவாமிக்குத்தந்துநீ மித்திரபேதங்கள்
செய்யலையோ, தெரியாதுள மறியாததோ பெரியோர்தவ நெறி
தானிதோ சீக்கிரம்போமென் றெழுந்திருந்தாள். (107)

சித்திரமெத்தையில் நித்திரைசெய்கின்ற செந்தில்வேலாண்
டியைத் தான்பார்த்து, தெய்வானையின் வைபோகமும் பொய்
யோவென உய்யும்வகை தெளிந்துவிண்ணப்பம் செய்யலுற்றார்()

கந்தரேநீயொரு கம்பத்திலரண்டானை கட்டவென்றோவிந்தக்
கோலங்கொண்டீர், கருணாகர மதுபோலவே குறமாதையு மறவா
மலே காதல்கொண்டீரென்ன பேதகமோ. (109)

என்னிலும்பார்க்க வதிசயமோவந்த வேடக்குறத்திமே லிச்
சைகொண்டீர், எங்கும்புகழ் மாதோயிவ ளெங்குங்கிடையாதோ
சொலுமென்னசொல்லியினி யாவதென்ன. (110)

அந்தப்புளிப்பு மறிந்துபாருமென் றுசைக்குமா குருபரனே,
அயில்நேர்விழி மயிலாளையுங் கைலாகுட னெயிலாகவே யன்புட
னேமணஞ் செய்யுமென்றாள். (111)

சந்தோஷஞ்சந்தோஷ மென்றெழுந்தார்கந்தர் தாகந்தெளி
ந்து மனங்குளிர்ந்தார், தனதாகிய மனையாளொரு மனதாகவே
சரணாகதி தந்தேவிடைகொடுத் தேகுமென்றாள். (112)

வள்ளியிருக்குந் தினைவனச்சோலைக்கு வழியெங்கேசொல்லும்
நாரதனே, மறவாதொரு குறமாதையு முறவாகியே வரவேணும்நீ
வாவென்றடங்காத மையல்கொண்டார். (113)

வில்லம்புகொண்டு வேடராஜன்போலே வெற்றிமகுட முடிபு
னைந்து, வேலாயுத கோலாகல சீலாவனு கூலாவர வேணுமென்று
ரந்த நாரதரும். (114)

அப்படியேகந்தன் வேடுவர்கோலங்கொண் டாறுமுகமொரு முகமாய், அருகேமுனி பிரகேவா குருவாகிய துரைவேலவ ரானந்தங்கொண்டு முன்னேநடந்தார். (115)

கந்தரும்நாரத ரும்வழிகூடியே காடுசெடியெல்லாந் தான்கடந்து, கனிவாய்மொழி யினிதாகவே தினைநூவியே வனமேதெனக் காரணமாக நடந்தாரே. (116)

பொன்மலையான மலைகடந்தார் பொங்குங்குற்றால மலைகடந்தார், பொதிகாசல மதிலேசிவ கதியாகிய நதிசூழ்தவம் புரியுங் கோசிக மாமுனிவன். (117)

வேள்விவடக்கு மலையிதுவாமிங்கே மெத்தவுஞ்சித்த ரனேகமுண்டாம், வெகுவாகிய தவமேவிய குகைபாரென விரைவாகவே விண்ணாட்டுநாரதன் சொன்னதுவே (118)

கந்தன்திகைத்து மதிமயங்கியந்தக் கானகமெங்குந் திரிந்தலைந்து, கனபேதையின் மனதாகியென் றனதாகிய வனவாசமே கன்னிதினைவனங் கண்டீர்களோ. (119)

போதனைக்குள்ளென்னை யாளாக்கியெந்தன் புத்தியைப்பேதகஞ் செய்தாயே, பொய்யோவிது மெய்யோவுன்றன் செய்கோலமோ ஐயயோவிந்த புலனிடத்தேனில்லை நாரதனே. (120)

சித்தமயங்காதே ஐயாவேயுன்றன் சிந்தையில்வேறெண்ணம் வையாதே, தேனார்மொழி மானையும் பூணாமலே வீணாகுமோ சீக்கிரம்வாரும் சுவாமியென்றார். (121)

மந்திரவேள்வி மலைக்கருகேயந்த வள்ளிதினைவனந் தோற்றுதுபார், மலையாதேநீ மெலியாதுவந் துலையேதினி நிலைப்பாரிது மான்மருகாகதிர் வேன்முருகா. (122)

சோலையிளங்குயில் மாமயிலாள்வள்ளி போலமென்குரல் பேசுகிறாள், தொனியோவிவள் மணியோதிகழ் பணிசேர்மொழி தினைகாவலில் சுந்தராகாதாரக் கேளுமென்றார். (123)

காதாரக்கேட்டு முன்னேநடந்தார்முனி காலக்கதிகொண்டு பின்றொடர்ந்தார், கருமாமுகில் நிறமோகுழல் தொனியோகுயில் நடையோகிளி கந்தர்தரிசனங் கண்டாரே. (124)

கண்ணுக்குள்ளேநின்ற கண்மணியோவந்த காமன்ரதியோ கதிர்மதியோ, கனசோபித மெனவேயிவள் தினமேவிய வனமேவருங் காரணமேதுசொல வாய்முனியே. (125)

தோகையெனுஞ்சுக பேதையரேயுன்மேற் காதல்கொண்டேனடிமாதரசே, கொஞ்சுங்குயில் மிஞ்சுந்தொனி நெஞ்சந்தனில வஞ்சந்தர கூவுதல்லோவிளஞ் சோலையிலே. (126)

மாரன்விடுங்கணை பட்டுருகிபெந்தன் மாரைப்பிளக்கு தடிம
யிலே, வாவென்றெனை மேவுந்தொழில் காவுங்கன தாவுண்டிட
மன்மதன்போற்கூட மாட்டேனே (127)

வந்தவிருந்துக் குபசரித்தன்னம் வழங்காதபேருண்டோவை
யகத்தில், மானேகனி தேனேஅடி தானேமய லானேன்முழு வஞ்
சகநெஞ்சம் படைத்தாயோ. (128)

சொன்னதெல்லாங்காதிற் கேட்கிலையோபெண்ணே என்னை
யுங்கண்ணாலே பார்க்கிலையோ, சோபந்தன மேவுங்கணை தாபம்
பெற நீவந்தெனை சொந்தமாய்கைவசம் செய்யாயோ. (129)

பேசினதாற்குலம் தாழ்வாமோயிளம் பேதையரேயுந்தன்
வாய்நோமோ, பெண்ணேஅடி கண்ணேமனம் புண்ணாகுது சொ
ன்னேனுந்தன பேரென்னசற்றேநீ கூறமென்றார். (130)

கந்தனுரைத்த மொழிகேட்டுவள்ளி காதிலிருகையை வைத்
துநின்று, கருணாகர வருணாசல வருவாய்துணை குருநாதனே கா
திலுங்கேழ்க்க விதியாமோ. (131)

ஆகட்டுமென்று மனந்துணிந்துவள்ளி மோகித்தகந்தரைத்
தான்பார்த்து, அடமோமன திடமோஅவ கடமோவென திடமீ
திவர் ஆர்சொன்னாரிம்மதி வேடுவனே. (132)

வாய்திறந்தோர்மொழி சொன்னதென்னிட மாதவம்தானடி
கண்மணியே, மாரன்கணை மீறுந்தன பாரந்தனி லேவந்துனை மரு
வியேமோகந் தெளியேனே (133)

மெத்தப்படித்தவன் போலேவந்தாய்நீ பித்தம்பிடித்ததோ
வேடுவனே, வேலுந்துணை கீழுந்துறங் கோலஞ்சுக காலக்கவை
வீணாகநீகெட் டலையாதே. (134)

ஏதடிபஞ்சமா பாதகியேநீயும் என்னிடம்வாது செய்யாதே,
இன்பாய்வெகு நண்பாகவே என்பங்கிலே அன்பாகவே என்றைக்
கிரங்குவாய் பெண்மயிலே. (135)

எட்டாததேனுக் கொருநொண்டியண்ணாந்து கொட்டாவி
விட்டக்கதைபோல, ஏங்கிக்கணை தாங்கிப்பணை வாங்கிமிக ஓங்கி
யெதிர் என்முன்னேநில்லாதே வேடுவனே. (136)

இப்படிநீமுழு வஞ்சகமாயெனை கற்பனைசெய்வானேன் மாத
ரசே, ஏழைக்கொரு வாழைக்கனி வேளைக்குத வாதிப்படி இன்
னமுமர்மம் விடாயோநீ. (137)

அண்ணமாரம்பு கொண்டுவருவாருன்னை அடித்துக்குலையை
ப்பிடுங்கிடுவார், அங்கந்துளை பங்கம்பட வெங்கும்பிர சங்கந்தர
அற்றவிழத்துண்டு செய்திடுவார். (138)

அற்றிருதண்டாய்நான் பட்டாலும்வேட ரற்றுவிழக்கணை
தொட்டாலும், ஆசைக்கொருநாளைக்கினைய பேசிச்சுக தாபத்து
டன் அன்பாயொருமுத்தந் தந்திடுவேன். (139)

சுற்றிசுற்றிவட்டம்போட்டுவனமெங்கும் சுற்றிநின்றேங்கித்
தியங்காதே, சொல்லக்கணை இலைப்படு கள்ளத்தொழி லுள்ளத்
திலே தோழியரைவிட் டடிக்கச்செய்வேன். (140)

மங்கையர்கையி லடிப்பட்டால்நான் தெய்வநங்கையாடும்
பலனைப்பெற்றேன்; மயிலைக்குற மயிலேகருங் குயிலேவிழி துயிலே
னடி வந்தொருவார்த்தைநீ பேசாயோ. (141)

ஏதுபுரியாச மிஞ்சுகிறாய்பெண்கள் சேதிபறியாமற் கொஞ்சு
கிறாய், இனிமேலுனை முனிவேன்பயம் செனியாமலே துணிவாகநீ
என்னகோலஞ்செய்ய வந்தாயோ. (142)

கோலமெல்லாமாசை கோலமல்லால்வேறே கோலமுண்டோ
சொல் பெண்மயிலே, கூவுங்குயில் மாவுங்கன நாகஞ்சுக மேவுந்
தொழில் கூடுமெபருவ மிதவுனக்கே. (143)

கொம்பிளவிற்பட்ட மந்தியைப்போல்நின்று வெம்பித்திரிந்து
மெலியாதே, பண்டாய்மனங் கொண்டாய்மயல் துண்டாகுவாய்
சொன்னேனினி காணமலோடுவாய் வேடுவனே (144)

பஞ்சையைப்போல்நின்று கொஞ்சுவண்டி பெண்ணே வஞ்சி
யின்வேல்விழிக்கஞ்சுவனோ, பழியாகிய மொழிபேசுவா யடியேன்
மனந் தொழியாதடி பாவியுன்சித்த மிரங்காதோ (145)

ஆர்குடிதன்னைக் கெடுக்கவென் றுயிவ னுண்டிவேஷங்கொண்
டுவந்தாண்டி, அவதூறிது புவிமீதிலே சிவனார்செய லதுபாரடி
அன்னமேயென னுயிர்ப் பாங்கியரே (146)

பாங்கியருமந்த வேடனைப்பார்த்து பதைத்துநின்றேமொழி
சொல்லலுற்றார், பழிகாரனே தெளிவாநீ மொழியாதேபோய்
வழிகூடுவாய் பாங்குகுலைந்திட நாளாச்சே. (147)

இங்கிதமென்மொழிப் பாங்கியரேநீங்க ளெனக்கும்வள்ளிக்
கும் பொதுவாமே, எனதுந்தன தென்றுந்தனை யென்றும்மற
வாதேயினி யென்றைக்குங்கீர்த்தி புண்டாகுமென்றார் (148)

வங்கணமுள்ளவன் போலேவந்துபெண்ணை வாதிட்டுயேய்க்
கவென் றிங்குவந்தாய், மதமோஇவன் விதமோயிது சூதமோ துரா
கிதமோவிது சற்றுக்கவனியுமவேடுவனே. (149)

நம்பினபேரை நடுங்கச்செய்வது ஞாயமல்லபெண்ணே பூம
யிலே, நாடுஞ்செயல் கூடுஞ்சிறு பேசிஞ்சரி சேர்ந்தோ நன்றாக
நான்மணஞ் செயவேனென்றார். (150)

கந்தனும்வள்ளியும் பந்தயமாய்நின்று கைசரசஞ்செய்யும்
வேளையிலே, கதருங்குட னுதருவகுலை யுதரும்விழி சிதறும்படி
கானகவேடுவர் வந்தாரே (151)

கானகந்தனிலே வேடவருமெய்ஞ் ஞானக்குமாரகுருபரனும்,
கண்டஞ்சியே நின்றஞ்செய லென்றும்புகழ் குன்றந்தனில் கார
ணமாய்கையாற் காட்டியொன்று. (152)

பூவுந்தழையும் பிஞ்சங்காயுமாய் புதுமையாக வளர்ந்தோ
ங்கி, பொங்கும்வன மெங்கும்மிரு டங்குபநிழ லெங்குந்தர பூரித்
துவேங்கை மாமானர். (153)

நின்றவேடுவர் முளைத்திடுமவேங்கை மரத்தையுங்கண்டு மதி
மயங்கி, மலைவேடர்கள் சிலர்கூடியே பலயோசனை செய்தேயிது
வஞ்சனையென்று நினைந்துசொல்வார் (154)

என்றுமில்லாவிந்த வேங்கைமரமிங்கே யின்றைக்குவந்து மு
ளைப்பதென்ன, ஏதோயிது சூதோவென தீதோதெரி யாதேயெ
ன்று ஏந்திழைவள்ளியைக் கேட்கலுற்றார். (155)

தங்கையெனும்வள்ளி நாயகியே அம்மா எங்கள்குலக்கொழுந்
தேகேளாய், சதிராசவுன் னெதிரேயொரு விதிகாரண மிதுவே
தென தயவாகவள்ளி சாற்றலுற்றாள். (156)

விள்ளுகிறேனினி யண்ணமாரேயந்த வேங்கைமுளைத்ததை
யானறியேன், வினையாகவே தினைதூவியே வனமீதிலே சனிபோ
லவே வீம்புக்குவந்து முளைத்ததென்றாள். (157)

பைங்கொடிவள்ளி யுரைத்ததைக்கண்டிந்த கந்தன்செயலெ
ன்றுவேடுவரும், கானக்குரலோசைப்படி நேசத்துடன் பேசித்தி
னம் பாலைவனத்தி லதிசயமே. (158)

தங்கைக்குவேங்கை மரந்துணையாய்நல்ல தாபல்யமாய்வெகு
சோபிதமாய், தங்கும்புனல பொங்கும்வன மெங்கும்நிழல் தங்கு
ம்படி சண்முகநாதனே துணையிருப்பான். (159)

ஏதுக்குமஞ்சாதே மாதாசேராங்கள் சோதிக்கதிர்கொய்தே
வருவோம், என்றுந்திகழ் கண்டுங்கன குன்றம்பதி சென்றுஞ்சில
வேடக்குறவர்கள் போனபின்பு. (160)

வேங்கையாய்நின்ற வுருமாறிக்கந்தன் வேடனுருவ வடிவாகி,
விரகத்தனம்பெருகிச்சுக சரசத்தொடு மருவிக்குற மெலலியர்க
பமிட மேதுசொல்வார். (161)

உன்னைமறக்கப் படவில்லையேயெந்தன் கண்ணுறக்கம் வரவி
ல்லையே, உனதாசையின் மனதாகவே நினைவாகுது தனதாகநீ யுற்
றதுணையாக நம்பிவந்தேன். (162)

ஆசைகொண்டபேர்க்கு ரோஷமில்லையென்று பேசவந்தாயி
துவேடுவனே, அட்டமாகிய மடவார்களி னிடமேவரு கட்னேதினி
யாசாரங்கெட்டவன் நீயல்லவோ. (163)

ஆசாரமுங்கள் வாசாரமேபெண்க ளாசாரமெல்லா நானறி
வேன், அடிபாதகி கொடிதாசநீ துடியாமனம் படையாதேநீ அன்
னமேதேனே பெண்மயிலே. (164)

வம்புக்குச்சண்டை வளர்ப்பதில்லையெந்தன் கும்புக்குறக்கு
லம்வேடுவனே, வந்தும்பல சூதுங்கன தீதுமபலி யாதெங்களை மா
ராட்டஞ்செய்ய முடியாதே. (165)

வம்பிலேமாபாவி நாரதன்வார்த்தையை நம்பிவந்தேன்மதி
கெட்டலைந்தேன், மதனன்கணை யதுவந்தெனை நிதமூந்தவ. சிவசிந்
தனை மதியும்பேதக மானதுவே (166)

கண்மணிபாவையை எட்டிஎட்டிச்சும்மா கையிற்பிடித்தா
லகப்படுமோ, காடுந்திட மேடுஞ்சிறு ஓடுங்குயில் பாடுந்தொனி
காமசரத்தை விளைத்ததென்றார். (167)

அந்தட்சணத்திற் குறவருமன்புடன் வந்ததைக்கண்டு கபட
மதாய், அருள்வேலவ னொருமாதவ னுருவாகியே குறவோர்கள்
முன் னங்கம்வெடுவெடுத் தாடிநின்றார் (168)

தொண்ணூறுஞ்சென்ற கிழவனைப்போலுடல் தொங்கியேக
ண்களும் பஞ்சடைந்து, சுழல்வாய்மொழி குளிர்வாகிய தளர்வா
ய்முதிர் பழமாகவே தோன்றியேகாவியும் பூண்டுநின்றார். (169)

கொட்டியபஞ்சுபோல் நரைத்தமயிரும்பல்லுங் கிட்டிபேவா
ய்நீர் வழிந்தொழுக, கோலஞ்சுக காலம்பணி தாளம்வெகு காலந்
தனை கொண்டுநடந்த பெரியவர்போல். (170)

செம்புலித்தோலும் விபூதிபஞ்சாட்சரத் தண்டுகமண்டலங்
கைபிடித்து, சிவனேயருள் பவனேயினி யவனேதுணை கதிநீயெ
ன்று தெளிந்தயோகியைப் போலேநின்றார். (171)

கானகந்தன்னிற் றபோதனர்வந்ததும் காரணந்தானென்று
பூரணமாய், கனவேடர்க ளனைவோர்களுந் தனதாயொரு மனதா
கவே கழலிணைபோற்றி பணிந்துசொல்வார். (172)

ஐயாவேபண்டார சுவாமிநீயெங்களை யாண்டகுலதெய்வம்
போலவுமே, அடிமேலடி தடுமாறியே கொடிதாகிய சுடுகானிலே
அங்கம்பொருந்தவே எங்குவந்தீர். (173)

வேங்கையுங்காட்டு மிருகங்களுக்கெல்லாம் யாங்குடன்தப்
பிப்பிழைத்துவந்தீர், விதிகாரண மதுபார்வளர் பதிதானிது எது
வோசொல வேணுமென்றாரந்த வேடரெல்லாம். (174)

சொல்லுவேன்கேளுங்க ளையமாரேவெகு தூரம்வட்கைலா சம்விட்டு, தங்கமாமதி சங்காசலமங்காம லுகந்தாடியே தொல்லு லகெங்கனுஞ் சுற்றிவந்தேன். (175)

தெண்டிரைசூழும பதியருணாசலம் சீர்காழியென்னும் சிதம் பரத்தில், சித்தம்பெற வைத்தும்பல முற்றம்பரி சுத்தந்தா தேடி யொருபலன் கிட்டாமல். (176)

கண்டிக்கதிர்காமன் கோசலதேசங் காசியிலுமது வாசியென, கண்டும்பல னுண்டுஞ்செயல் சொணடும்புக ழொன்றுந்தருங் கன்னியாகுமரி யாடவந்தேன். (177)

சத்தமுஞ்சுத்தமும் வேறுபட்டுத்தலை சுற்றியேபுத்தியின் கூறுகெட்டு, தள்ளுங்குலை தள்ளுந்துப ரள்ளுந்துணை கொள்ளும் வெகு தாவந்தமாகிய வேளையப்பா. (178)

உங்களைத்தஞ்சமென் றேநம்பிவந்தேனு னங்கைக்குறக்குல வேடுவரே, உலையாமென களையாதொரு நிலையர்விட மிலையோவெ னக் குண்மைசொல்வீரெங்க ளையமாரே. (179)

அப்படியேயுங்கள் சொற்படிகேழ்க்கிறோ மன்புள்ளதங்கை யொருத்தியுண்டு, ஆடுங்கயல் கூடுமெவிழி நீடுந்தினை நாடும்புன லதோயிருக்குது வாருமென்றார். (180)

மெள்ளமெள்ளக்கை பிடித்துபண்டாரத்தை வேடிக்கையாக நடத்திக்கொண்டு, வேலன்செய லாலேயனு கூலம்பெற வாவென் றவர் மெல்லியற்கேதுணை யாகவைத்தார். (181)

தங்கமேபெண்குயி லேமயிலேவள்ளித் தாயேநம்குல சாமி யைப்போல், தாபந்தம தாய்வந்தவர் சோபங்கள பாவம்மிது தஞ் சமென்றோர்களைத் தள்ளுவரோ. (182)

ஆனுமிந்தப் பாதேசியோமெத்த அதிதியைப்போலவுங் காணுதம்மா, அன்பாயிவ ரின்பாய்மிக வன்பேசெய உன்பாக்கி ருபை யாகவந்தனம் தெண்டனிட்டார். (183)

நல்லதினைக்கொய்து போம்பொழுதுங்களை நாங்களுங்கூட் டியே செல்வோமென்று, நன்றாய்மன மொன்றாகவே சென்றார்மதி கண்டார்குற நம்பியும்வேட ரனைவோரும். (184)

தந்தையண்ணன்சொலைத் தப்பாமல்வள்ளி சிந்தைதெளிந் து மனங்குளிர்ந்து, தாகத்தொடு மோகித்தொரு யோகப்பர தே சிக்கிவள் சரணமென்றிரு கைகுவித்தாள் (185)

ஆண்டவனேபண் டாரமேபோற்றிபென் னையனேயெங்கிருந் தெங்குவந்தீர், ஆடம்பர வேடம்புனை நீடும்பர வாடுஞ்செய லங்கந் தளர்ந்திடுங் காலத்திலே. (186)

மாதவரேசிவ சங்கமரேஜயா வேதமெய்ஞ்ஞான தபோதனரே
வாரும்பா ணேறுங்களை தீருந்தகை யாருந்தினை மாப்பலகாரங்
கொடுத்திடுவேன். (187)

காத்தபொருளைக் களைபோகக்காத்து பேத்தியானேழைப்
பண் டாரமல்லோ, கண்டுந்தனை கொண்டுஞ்சுக. மென்றும்பல
னுண்டாம்படி காப்பாற்றவேணுங் கடனுனக்கே. (188)

நல்லதுபண்டாரஞ் சுவாமிசற்றேபொறு உள்ளமும்போலே
பசிக்கழுது, நாவும்முணர் வாகத்தினை மாவும்மிகத் தேனும்பழம்
நான்கொண்டுவாறேனென் றேயெழுந்து. (189)

செந்தினைமாவை யிடித்துப்புடைத்துத் தெள்ளியதேனை விட்
டுப்பிசைந்து, தேறுங்கனி மீறுஞ்சுவை யாருங்களி கூறும்படி சித்
திரமாய்ப்பல காரஞ்செய்து. (190)

தேக்கிலைகொண்டதை தொன்னைதைத்துஅதில் தேனுந்தினை
மாவும்முன்னே வைத்து, சிறியாளுமையறியாதவள் தருபோசனப்
பரிபூரண தேவாவுண்டுபசி யாறுமென்றார். (191)

மாப்பலகாரமிர் தாருமையாசும்மா சாப்பிடுஞ்சுவாமியென்
றேகொடுத்தாள், வாசம்பல காரத்தையு மாசைப்பட நேசித்தவர்
வஞ்சகமாய்த்தினை மாவையுண்டார். (192)

உண்டந்தமாவை நன்றாகவிழுங்கவே வுருண்டுசுருண்டு தண்
ணீர்தளும்பி, யோடிக்களை மூடியுடல் வாடிக்குடலாடிப்பரந் துள்
ளுடைந்தங்கந் தள்ளாடையிலே. (193)

கண்டந்தவள்ளி திடீரென்றெழுந்துதன் கால்புதறிக்கிட்ட
வோடிவந்து, கைலாகுடன் மயில்வேலனை குயிலாள்குற ஒயிலாள்
தானுங் காதினில்சுக்கைவைத் தூதிநின்றாள். (194)

பெண்ணேயென்றோடி முன்னேவந்தாளடி பேத்தியென்
றார்வள்ளி போற்றியென்றார், பேதத்தினை மாவைக்கன மாதேதா
நீவைத்தது பேதகமென்றுந் தெரிந்திலனே. {195)

மாவென்றுசொல்லியே நஞ்சைதந்தாய்பாவி தாவென்றுசொ
ல்லியே வாங்கியுண்டேன், சதியோயிது விதியோவென கதியோ
தலை விதியோயினி வாதென்னவென் னுயிர் போகுதென்றார்.(196)

தொண்டையைச்சுற்றிப் பிடிக்குதடிவுயிர் கண்டத்தில்நின்று
துடிக்குதடி, சூதுங்கன தீதுஞ்செய லேதுந்தெரி யாதெந்தனை
தோதகஞ்செய்யத் துணிந்தாயே. (197)

எட்டிக்கனியோசெங் கொட்டையோபாஷாணக் கட்டியெ
னக்கென்றே தேடிவைத்தாய், ஏழைப்பா தேசிக்கிது வேளைப்பல
னேயுற்றது இப்படியுஞ்சதி செய்வாயோ. (198)

கன்னியாகுமரி யாடவந்தபலன் கைமேற்பலித்ததே சண்டாளி, காதுக்குளே சிவக்கணை சூதற்றுளம் பேதிக்குது கன்னியேதண்ணீர் வேணுமென்றார். (199)

தண்ணீரென்றுள்ளந் தயங்கியபண்டார சாமியிதுவென்ன கோலமையா, தலைநாள்விதி பலனோகதி குலபாதக மலவோயிது சம்புசதாசிவன் சோதனையோ. (200)

கொம்புத்தேன்விட்டுப் பிசைந்தபலகாரங் கொண்டுவந்துண்ணக்கொடுத்தபலனை, கோலஞ்சுககாலங்கனி காலமிது வேலனைசெயல் கூற்றுவன்போல்வந்தீ ராண்டவனே. (201)

நன்மையேநான்செய்ய துன்மையென்றீரையோ நல்லதுக் கோயிதுகாலமல்ல, நானும்பல காரங்கனி தேனுந்தினை மாவுந்தரநஞ்சென்றுசொன்னீரே வஞ்சகமாய் (202)

தந்தையண்ணமார்க ளெந்தனுக்குன்னைச் சகுனியைப்போலவே கொண்டுவந்தார், தாவுங்கணை யாவுங்குயிற் கூவும்பன மேவுஞ்சுனை தண்ணீர்சாப்பிடும சாமியென்றாள். (203)

இந்தச்சுனைநீ ரருந்தவென்றாலிப்போ சந்தேகந்தோற்றுது வேண்டாம்போ, என்பால்மன தன்பாலிரு கண்பாரடி பெண்பாவையே என்பழியையிங்கே காணுமென்றார். (204)

வம்புகள்கொண்டபண் டாரமேயின்னம் வாயில்வந்ததெல்லாம் பேசுகிறீர், மாயன்விதி சூதென்பது எதுந்தெரி யாதிங்கினி வாருமிந்தச்சுனை பாருமென்றாள். (205)

கள்ளமில்லையிது நல்லதண்ணீரையா மெள்ளயிறங்கிப் புசியுமென்று, கன்மாகிய வனமீதிலே தனதாகிய சுனையிதென கன்னியுமெள்ள விறக்கிவிட்டாள. (206)

தாகமுடன்சுனை நீரையள்ளிமிகப் பாகமுடனுண்ணும் வேளையிலே, தடுமாறுதென் னடிசோறுது விடுமோபழி யடியாதகி சற்றேயொருகையை நீட்டுமென்றார். (207)

ஆதாரமாய்த்தண்ணீர் கேட்டதற்கோயென்னைப் பாதாளந் தன்னிலே தள்ளிவிட்டாய், அரனார்செயல் தருவாரடி குறமாதனை மறவேனினி யாபத்துக்குப்பாவமில்லையென்றார். (208)

கையைப்பிடித்தென்னைத் தூக்கடிபாவிநான் பையப்பையக் கரைசேருகிறேன், கடிதேதுயர் கொடிதேவெயில் சுடுதேவுயிர் விடுவேனினி காலமெங்கேயிது கோலமென்றார். (209)

ஆருமற்றபரதேசியேயுன்கையைத் தாருமென்றேவள்ளிகைபிடித்து, ஐயாவொரு கையாதார வையாயிது மெய்யாயிது ஆண்டவரேவாருமென்றிழுத்தாள். (210)

சந்தோஷம்வள்ளிகை தந்ததேலட்சம்பொன் தானென்று
பண்டார மானந்தமாய், தாகக்கன போகத்தொடு மோகக்களை
யேயுற்றவர் சம்பிரமாகக்கரை யேறிவந்தார். (211)

கோகனகக்குற மானேயிருவருங் கூடினதாலொரு குற்ற
முண்டோ, கோலத்திரு மேனிக்குற மானேதிரு வேகற்றவன்
கூசாமலெந்தனைச் சேராயோ. (212)

பண்டாரமேயுன்னைக் காத்தபலனெனக்குப் பலித்ததுயிப்
போதுகைமேலே, பாபந்தன சோபம்வெகு தாபந்தமதாய்வந்தே
னைப் பாசாங்குசெய்தாயே பாதகனே. (213)

புண்ணியமென்று நரைக்கிழவா நல்ல தண்ணீர்கொடுத்ததும்
வீணாச்சே, பொல்லாதவன் நில்லாதேநீ சொல்லாமொழி விள்ளா
தேநீ புத்திகெட்டவாண்டி தூரநில்லும். (214)

பிச்சைக்குவந்தவன் பெண்டுக்குமாப்பிள்ளை யிச்சைகொண்
டாலது நிச்சயமே, பேதைத்தன மாயித்தனை சூதற்றிடு தோதக்
கிழம் பேசட்டுமென்று நடந்தாளே. (215)

அந்தமொழியை யறிந்துசிவகிரி கந்தனுஞ்சிந்தை மதிமயங்கி,
அருமைக்குற மகளைத்தன முறிமைப்பட மனமுற்றவர் யானைமு
கவனைத் தியானஞ்செய்தார். (216)

மந்திரத்தியானமாய் கந்தனுரைத்ததை தந்திமுகவனறிந்து
கொண்டு, மலைமுடியே சிலையோடவும் பிலமாகிய குலயானையாய்
வள்ளியின்முன்வந்து தோன்றினரே. (217)

வெண்ணிறங்கொண்ட வடிவாகித்தந்தி வீர்கொண்டுவள்ளிக்
கெதிர்வரவே, வெறுண்டஞ்சியே நின்றங்ஙனே மருண்டுஞ்செடி
யொன்றுந்துணை காணாமலேவள்ளி யோடிவந்தாள். (218)

ஐயாவேபண்டார சுவாமிநமஸ்காரம் யானைமிரட்டுதே கான
கத்தில், அன்பாகவே நம்புமுனை யென்பால்வருந் துன்பந்தனை
ஐயாவடைக்கலங் காருமென்றாள். (219)

என்னடிபாதகி நீயென்னைக்கொல்லவே முன்னமேமாவென்
று நஞ்சைதந்தாய், எந்தன்விதி முந்துங்கதி யுந்துஞ்சதி கந்தன்
செயல என்னமோதப்பிப் பிழைத்துவந்தேன் (220)

தாகத்துக்குத்தண்ணீர் வேணுமென்றேனுயிர் போகக்கிணற்
றிலே தள்ளிவிட்டாய், தத்தித்தலை சுற்றிச்செயல் முற்றிப்படி
தொற்றிப்பிர தாபத்தொடுநான் வெளியில்வந்தேன். (221)

மூன்றுவதானையைக் கொண்டுவந்தாயையம பூண்டாவியங்
கங் துடிக்குதடி, மோசப்படி நேசம்விசு வாசம்வெகு தோஷமுனை
முக்காலும்நம்பப் படாதுகண்டாய். (222)

என்னைவிலக்கி விடுஞ்சுவாமிதாங்கள் சொன்னபடியெல்லாம
நான்கேட்பேன், இச்சைப்பட விச்சித்தர மெச்சிக்கன பட்சத்
தொடு என்றைக்குஞ்சொந்தப்பெண் ணாவேனென்றாள் 223)

பெண்களைநம்பியே பங்கமழிந்தவா கங்குகரையுண்டோ மங்
கையரே, பெருக்குண மாறும்மிகழ் வாரும்பவ தூறும்வரும் பேச்
சுறுதிக்கோர் சாட்சியுண்டோ. (224)

சொந்தமனையாட்டி என்றுநீகைதந்து சிவன்பேரிலாணையிட்
டேகொடுத்தால், சோனைத்தட வானைப்பயம் நானிப்படி மானத்
தொடு தூரத்தள்ளியுனைக் காப்பேனென்றார். (225)

சொற்படியாணையிட் டுக்கொடுத்தாள்வள்ளிக் கைப்பிடிநாய
கன் நீயேயென்றாள், துடரும்பழி யடரும்வினை யடருங்கரி நடரும்
பழி சொல்லுமியானையும் போனதுவே. (226)

சேவலும்பன்னிரு தோளுமாகவே சென்னியோராறு முகந்
துலங்க, செம்பொற்றன பைம்பொற்குற மங்கைக்கெதிர் சம்ப்
ரத்தொடு சிங்காரவேலன் சேவைதந்தார். (227)

கண்ணாரக்கண்டவள் தானென்னவிது காரணமோபரிபூரண
மாய், கந்தன்மலர் விந்தந்தனில் வந்தும்பணி தந்துந்திரு காட்சி
பெற்றுள்ளங் கனிந்துசொல்வாள். (228)

சாமியான்செய்த பிழைபொறுத்தென்னையுந் தற்காக்கவே
ணுஞ் சுவாமியென்று, தஞ்சம்புகழ் நெஞ்சுங்கன ரஞ்சும்பிர பஞ்
சந்தனில் தள்ளாமலென்னையாட் கொள்ளுமென்றாள். (229)

அற்புதமாகிய கண்மணியேயினிச் செப்புவேன்நான்வந்த
காரணத்தை, அலையிற்றனி நிலையிற்றுயில நிலையிற்பல மலைசுற்றிடு
மாலுமென் மாமன் மகளல்லவோ. (230)

முன்னொருசாபத்தால் விபுதைமாதுன்னைப் பெண்ணென்று
பெற்று வளர்த்தாளே, முறைதங்கிய குறமங்கையர் நிறையும்மதி
வரவுந்தலை முனிவனாலொரு மான்வயிற்றில். (231)

பின்புஜனனங்கொண் டாய்மயிலேஅதின் முன்புசரவணப்
பொய்கையிலே, பேசுங்களி நேசம்பிர வாசம்பர காசந்தர பெண்
ணேதிருவவ தாரஞ்செய்தேன். (232)

வந்துனைச்சேரவென் றேயயன்கற்பனை தந்திடுங்காரண மிது
வலவோ, மாதேயடி கோதேமலை யாதேபுவி மீதேயினி மனமதனு
ம்ரதி போலவுமே. (233)

என்றைக்குஞ்சோடு பிரியாமற்சுகங் கொண்டுகுலாவி முறை
ப்படியே, இருபேரொரு மனதாகவே யிமையாகிலும் பிரியாமலே
ஏகபோகமாய வாழ்ந்திருப்போம். (234)

மூத்தக்குடியொரு பெண்டுண்டவளினும் நேத்தியாயுன்னைக் கண் பார்த்திடுவேன், மோகம்வெகு வாகக்கன பாகஞ்சுக போகத் தொடு மொய்குழல்வள்ளியைக் கைகலந்தார். (235)

வாலசரவண வேலனும்வள்ளியும் கோலமனேக விதம்வித மாய், மானுஞ்செயல் தானும்புனல்கானந்தனில் ஆனந்தமாய் சந் தோஷமாகவே தானிருந்தார். (236)

வட்டிப்பாதங்கள போலவுங்கூடியே விட்டுப்பிரியா தினங் கனமாய், வரிதாய்வெகு பரிபாசமே செரிதாகிய வரியோன்மக ளொன்றைவிட்டொன்றைப் பிரியாமல். (237)

நஞ்சுண்டகெண்டையைப் போல்மயங்கியங்கே கொஞ்சுங்கி ளிமொழி வஞ்சியுந்தான, நாடுஞ்செயல் கூடுங்குயில் பேடுஞ்சரி கோடுந்தர நானுனைவிட்டுப் பிரியேனென்றாள் (238)

தீராதமையல்கொண் டேயிருபேர்களும் மாறாதமோகக் கட ல்குளித்து, சிந்தம்பரி சுந்தம்பெற வைததுக்கனி முத்தந்தர தெ ன்றலுலாவிய கானகத்தில். (239)

கோபந்தெளிந்து கந்தனும்வள்ளியுந் தாபந்தணிந்து வெளி யேறி, துறவாகிய குறமானையும் விரைவாகநீ பரண்மீதிலே தோழி யர்தம்முடன் சேருமென்றார். (240)

வந்ததடத்தின வழியேகுறக்குலப் பைங்தொடிசென்றனள் கானகத்தில், கனவேகமா யெனவேகிய கனியாகிய திணைசூழபுனல் வந்துகண்டாள்வள்ளி பாங்கியரும். (241)

கூந்தலுலர்ந்து குலைந்ததென்னமுகஞ் சோர்ந்திருகண்கள் சிவந்ததென்ன, கோலம்பயில் சாலம்மனு கூலந்தரு மாலிங்கிது கோதையிதுவென்ன வென்றுகேட்டார். (242)

தண்ணீர்சுனையில் நடந்திடுங்காரணம் பெண்ணேவள்ளிததா யே சொல்லுமென்ற, தயவாயுரை மயமோகுற மயிலேயிது பயி லேகதை சந்தேகமென்றார்கள் பாங்கியர்கள். (243)

சொல்லுவன்கேளடி அன்னமேகண்மணி தோகையேயென் னுயிர்ப் பாங்கியரே, சுனையுந்தக புனையுங்கிழ வனையும்பல விளையு ம்படி சோபத்தைமாற்றித் தண்ணீர்கொடுத்தேன். (244)

தண்ணீர்கொடுக்கின்ற வேளையிலேவெகு உன்னிதமாயந்தக் கானகத்தில், சந்தத்தொனி திக்குஞ்சில சிததம்பய முற்றங்குமே னி தந்தியும்வாயவிட் டலறிடவே. (245)

சிந்தைகலங்கி பயந்தேனடியம்மா பைந்தொடியேநான் வரும் வழியில், செடியும்வெகு பொடியும்பல கொடியும்பொழு வழியும் படி தேகமெல்லாமுட் கிழித்ததென்றாள். (246)

அப்படியேவள்ளி யம்மையுஞ்சொன்னசொல் லொப்பிதமில்
லர்மல் தோழியர்கள், அதிமோகன ரதியேயொரு விதமாய்முக
மதிசோறுது ஏதுசொல்வாயென்றார் பாங்கியர்கள். (247)

பாங்கிகளிப்படி கேட்டிடவேவள்ளி யேங்கிநின்றாரிந்த வேளை
யிலே, பருவத்துட னேவேடுவர் ரூபத்துட னேவந்துமே பானுக்
கெதிரினை றேதுசொல்வார். (248)

நானெய்தமானிந்தக் கானகந்தனிலே தான்வந்துதேயவதைக்
காணீர்களோ, ஒளியிற்றிடுஞ் சபைபெற்றமதோர் மொழிகற்றிடும்
வழிபெற்றிடும் நாகரீசமுள்ள தோகையரே. (249)

என்றமேவேடுவ ராசனுங்கேட்கவே நன்றுநன்றென்றுதான்
பாங்கியர்கள், எங்கள்சிறு பெண்ணென்றுநீ ரிங்கிதத்துட னிங்கு
வந்துதா னென்னமொழிசொன்னீர் வேடுவனே. (250)

மாந்தளிரால்மான் எய்வதுண்டோசும்மா யேன்தான்பொய்
கள்சொல்லுகிறாய், நீரெய்திடும் மானுக்கிரு கால்ரண்டுகை மேனி
த்தொடு காதோலையும்வர்னச் சேலையுண்டோ. (251)

சொல்லென்றுவேடுவ ராசனைக்கேட்கவே நல்லதென்றுசும்
மா தானிருந்தார், சரசத்தொழி லேமிஞ்சிய சரசக்குயி லேயுள்ள
தைச் சொலலென்றுவள்ளியைக் கேட்டாரே. (252)

ஏதடிபாங்கிகள் நான்சொல்லும்வார்த்தையைச் சூதென்று
சொன்னீரநீதமாய், எனைநீங்களுந் தனதாகவே மனஞ்சோதிப்ப
தேதுகாரண மேதுமறியே னெனவுரைத்தாள். (253)

உள்ளதைச்சொல்லென்று லெங்களுடன்மொழி கள்ளமாய்ச்
சொல்வது ஞாயமல்ல, ஒளியாமலே தெளிவாகநீ மொழிவாய்மு
கஞ் சளியாமலே உண்மையைச்சொல்லென்றார் தன்மையுடன்.

தன்மையாய்ப்பாங்கிக ளுண்மையைச்சொல்லென நன்மை
யுடன்வள்ளிநாயகியும், தனதாகிய சகிமார்களே வினவென்றொரு
மனதாகவே தன்கதையைவிள்ள மனந்துணிந்தாள். (255)

விள்ளுவன்கேளென் னுயிர்த்துணையாகிய மெல்லியெனுஞ்சகி
மாதர்களே, விதிகாரண மதினாலயோ வதிமோகமா யொருவேடு
வன் வேஷங்கொண்டென்முன்னே வந்ததுவும். (256)

வந்தவரென்னுடன் சொந்தமாய்வார்த்தைகள் விந்தையுட
ன்பேசிநின்றிடவும், வனமேவிய வெனதண்ணர்கள் சினமாய்வர
தினைமேவிய வனத்தில்வேங்கை மரமானதுவும். (257)

வேங்கைமரத்தையுங் கண்டண்ணரெல்லோரும் வேலனசெ
யலென்று போனபின்பு, வேறுருபமாய் நாடிவந்தெனைக் கூடிடா
யென மோடிபேசியே வேடுவராசனும் நிற்கையிலே. (258)

அப்போது அண்ணர் வருவதறிந்துதான் தப்பாது நூறுவயது
சென்ற, அரிதாகிய பெரியோரென பொறியைம்புல னிடர்நீங்கிய
ஆதிசிவனைப்போல் நின்றதுவும். (259)

நின்றவரைக்கண்டு அண்ணமார்கூட்டியே நன்றாகநம்மிடஞ்
சேர்த்ததுவும், நினைவாகியே திணைமாவையுந் தனதாகவே மனதா
கிய நேர்மையாயுண்டபின் தாகமென்றார். (260)

தாகந்தீரத்தண்ணீர் நான்கொடுத்தேனென்மேல் மோகங்
கொண்டார்நானும் கோபங்கொண்டேன், தானும்வழி கூடியிருட்
கானந்தனில யானும்வா தந்தியெனும்யானை வந்ததுவே. (261)

ஆனைவருவ தறிந்தவர்பக்கம் போனேனென்கிட்ட வராதே
யென்று, அவராசையு நிறைவேறிட யுறவாகினேன் பெரிதாகிய
யானையுங்கானகஞ் சென்றதுவே, (262)

சென்றபின்வேலவ ராறுமுகத்தோடு வந்தனரெந்தனுக் காட்
சியுடன், தெரிசித்திட வேதந்தனர் பரிசுத்தம தாய்நின்றவர் தே
ன்மொழியாளுள்ள சேதிசொன்னாள். (263)

இப்படியென்றொரு வார்த்தைநீமுன்சொன்னால் தப்பிதஞ்
சொல்வமோ மாதரசே, இனிதாயொரு மனதாகவே யுனைமேவிய
தனதாகின தெல்லோர்க்குநன்மைதா னென்றுசொன்னார். (264)

சந்தோஷமாகவே பாங்கியரிருவருங் கந்தன்மலர்க்கழல தா
ன்றுதித்துச், சரணாகதி யெனவெனறுமே குருநாதனே துணையெ
ன்றுமே சாஷ்டாங்கமாகவே தெண்டனிட்டார். (265)

தெண்டனிட்டபாங்கி மார்களைப்பார்த்துமே பண்டர்சிறை
மீட்ட வேலவரும், தேனார்மொழி மானார்களே யானுமே நானெ
ன்றுமே தெரியாமலேநீங்கள் செய்தபிழை. (266)

உங்கள்மேல்குற்றங்க ளில்லையடிபாங்கி பெண்களாமெங்க
ளிருவருக்கும், உறவாகியே தருவீரெனக் குறவாகிய துரைவேல
வன் உண்மையைச்சொல்லவே பாங்கியர்கள். (267)

சாடையறிந்து வனம்போனார்தந்தன் பேடைமயில்வள்ளியா
ளுடனே, தருணம்மிது தானென்றுமே கருணையுடந் தேகூடினர்
சந்தோஷமாக விருவருந்தான். (268)

வள்ளியைக்கந்தன் மருவியவிக்கதை வாசித்துக்கேட்டு மெ
ழுதினோர்கள், வேலனருளாலேமிக பேரும்பெற சீராகவே வாழ்
ந்திருப்பார்கள் மனமகிழ்ந்தே. (269)

முருகர் ஒயிற்கும்மி முற்றிற்று.